


9788193651016



அழகப்பா பல்கலைக்கழகம்
தமிழ்த்துறை
காரைக்குடி - 3




ரூசா (RUSA Phase 2.0) நிதி

# சமூக நல்லிணக்கத்திற்குத் திருக்கோயில்களின் பங்களிப்பு

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை - 2019

பதிப்பாசிரியர்கள்




பேரா. மு.பாண்டி,
பேரா.சு.இராசாராம்,
இ.பேரா.மு.நடேசன்,
உ.பேரா. மு.சுதா,
உ.பேரா. சொ.சுரேஷ்

முனைவர் மா.மணிகண்டன்,
முனைவர் வ.பாவரசன்,
முனைவர் பா.திருக்குமரன்




முதல் பதிப்பு : அக்டோபர் 2019

நூற்பெயர் : சமூக நல்லிணக்கத்திற்குத் திருக்கோயில்களின் பங்களிப்பு

பதிப்பாசிரியர்கள் : பேரா **மு.பாண்டி**
பேரா **சு.இராசாராம்**
இ.பேரா **மு.நடேசன்**
உ.பேரா **மு.சுதா**
உ.பேரா **சொ.சுரேஷ்**
முனைவர் **மா.மணிகண்டன்**
முனைவர் **வ.பாவரசன்**
முனைவர் **பா.திருக்குமரன்**

தாள் : வெள்ளைத்தாள் 16 கி.

நூலின் அளவு : 21.5 X 145 கி.கி

ISBN No. : 978-81-934510-1-4

வெளியீடு : பதிப்புத்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்,
தமிழ்த்துறை, காரைக்குடி.

பொருள் : கட்டுரைகள்

விலை : ரூ.500

அச்சிட்டோர் : **தோழா அச்சகம், காரைக்குடி – 630 002**

60. முனைவர் கி.சர்மிளா 439
திருவாசக கோயில்களும் மாணிக்கவாசகரின் வழிபாடும்

61. முனைவர் க.சவுந்தரவள்ளி 446
சமூக வரலாற்றுப் பக்கங்களில் திருப்பரங்குன்றம்

62. சே.சாந்தி 451
குன்றாண்டார்கோயில் குகைக்கோவில் வரலாறு

63. முனைவர் செ.சாந்தி 455
திருக்கோயில்களின் தேவகோட்டச் சிற்பங்களும் சமூகப் பின்னணியும்

64. முனைவர் தெ.சாந்தி 466
செறைக்கன்னிமார் கோயில் வழிபாட்டில் சமூக நல்லிணக்கம்

65. முனைவர் யா.சாம்ராஜ் 470
வரலாற்று நோக்கில் காட்டுநெடுங்குளம் புனித செபஸ்தியார் திருத்தலம்

66. முனைவர் பா.சிங்காரவேலன் 476
பிடிமண் கோயில்கள்

67. வே.சிவகுமார் 483
புராணக்கதைகளின் வழியாகத் தமிழ்ச் சமூகத்தினை முன்நிறுத்துதல்: (திருவிளையாடல் புராணத்தை முன் வைத்து)

68. முனைவர் ச.சிவசங்கரி 489
நாச்சியம்மன் திருக்கோயில்

69. க.சிவரஞ்சனி 493
அட்சயபுரீசுவரர் கோயிலின் வரலாறும் சமூக நல்லிணக்கமும்

70. ரா.சிவராம் 497
பெருங்காரையடிமிண்ட ஐயனார் கோவில் வழிபாட்டில் தமிழர் வரலாற்று மீட்டெடுப்பு - ஓர் ஆய்வு



71. அ.சீனிராஜ் 505
காளையார்கோயில் ஓர் ஆய்வு

72. பா.சுகன்யா 508
காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயில் வழிபாடும், சிறப்பும்

73. சே.சுதா 512
ஓரிக்கோட்டை இந்து கிறித்தவ சமூக நல்லிணக்கம்

74. கி.சுதா 516
உஞ்சனைத் திருக்கோயிலும் சமயப்பொறையும்

75. முனைவர் பா.சுபாஷ் போஸ் 520
சென்றாயப்பெருமாள் கோயிலின் வழிபாட்டு முறைகள்

76. ஆறு.செல்வமணி 526
நலம் பயக்கும் நாரணபுரத் தெய்வ வழிபாடுத் தலங்கள்

77. **Dr.M.Syed Ibrahim** 531
RAMANATHAPURAM DISTRICT HISTORICAL ISLAMIC PILGRIMAGE IN ERVADI DARGAH

78. முனைவர் ம.டேனியல் 539
காரைக்குடி தென்னிந்தியத் திருச்சபையின் வழிபாடும் சமூக நல்லிணக்கமும்

79. முனைவர் ச.தமிழரசன் 544
சமூக நல்லிணக்கம் நல்கும் திருவாப்புடையார் கோயில்

80. போ.தமிழரசன் 552
பெண் தெய்வ வழிபாடு

81. முனைவர் கோ.தர்மராஜ் 557
மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தலபுராணம் - ஒரு பார்வை

82. முனைவர். ம.தனலெட்சுமி 562
பெருங்காளூர் நாட்டுத் தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும்

83. பா.தாமரைசெல்வி 571
குமரிமாவட்ட சுசீந்தரம் கோவிலின் சிறப்பு சிற்பங்கள்

## வரலாற்று நோக்கில் காட்டுநெடுங்குளம்

## புனித செபஸ்தியார் திருத்தலம்

முனைவர். யா.சாம்ராஜ்
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள்
கல்லூரி,
சிவகங்கை.

### முன்னுரை

எப்படியும் வாழ்வது வாழ்க்கை அல்ல. மாறாக இப்படித்தான் வாழ வேண்டும் என்பதைச் சமயங்கள் முன் நிறுத்துகின்றன. அதனைப் பின்பற்றியவர்கள் புனிதர்களாக இப்பூமியை ஆழ்கிறார்கள். அறம், பொருள், இன்பம் தமிழ்மரபு வைதீகம் வீடுபேறு பற்றி கூறுகிறது. நான்கில் மனிதன் வாழ்ந்த வாழ்க்கையின் எச்சமாக வீடுபேறு மிகவும் இன்றியமையாததாகத் திகழ்கின்றது.

"ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? (மாற்கு **8.36**) என்று திருவிலியம் புதிய ஏற்பாடு சான்று பகர்கின்றது.

இன்றைய பரபரப்பு உலகில் பொருள் தேடவும், தேடியப் பொருளை பகட்டு வாழ்க்கை வாழ்ந்து பட்டுப் போகச் செய்யவுமே தங்களை முதன்மைப்படுத்திக் கொள்கின்றனர். இது அர்த்தமுள்ள வாழ்வாகுமா? இதனை,

"மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தைச் சேமித்து வைக்க வேண்டாம்" என்று (மத்தேயு **6.19**).

"இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள், வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது, வழியும் மிகக் குறுகலானது. இதைக் கண்டுபிடிப்போர் சிலரே" (மத்தேயு **7.13.14**) என்ற வார்த்தையானது மனிதன் இறைவனோடு இரண்டறக் கலக்க ஆயத்தப்படுத்துகின்றது. இவ்வாறாக இறந்த பிறகும் ஒரு பேரின்ப வாழ்வு



இருக்கின்றது. அதனை மிகச் சரியாக பயன்படுத்தி புனிதர் பட்டம் பெற்று பல கோடி மக்களுக்கு புதுமைகள் வழங்கும் புனித செபஸ்தியார் குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

### புனித செபஸ்தியாரின் பிறப்பு

இறைப்பற்றில் தன்னை முழுமையாக அர்பணித்தப் புனித செபஸ்தியார் பிரான்ஸ் நாட்டில் நர்போன் நகரில் கி.பி.257-ஆம் ஆண்டு பிறந்து, இத்தாலியில் உள்ள மிலான் நகரில் வளர்ந்து, அறிவும் ஆற்றலும் பெற்று, வனப்புமிக்க இளையனாய் பாதுகாப்புப் (இராணுவம்) பணிக்குத் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

### பாதுகாப்புப் (இராணுவம்) பணி

புனித செபஸ்தியார் இயேசு கிறிஸ்துவின் மிக்க அன்பர். கி.பி.2-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலக்கட்டத்தில், உரோமபுரி அரசு கிறித்தவர்களைக் கொடுமைப்படுத்தி சிறையில் அடைத்தது. சிறையில் உள்ள கிறித்தவக் கைதிகளின் விசுவாசத் தளர்ச்சியைப் போக்க, பேரரசர் கறினுசின் படையில் புனித செபஸ்தியார் சேர்ந்து மிகச் சிறந்த படைவீரரானார். வேதத்திற்காக சிறைக் கூடங்களில் அடைபட்டு மிக்கத் துன்பத்தை அடைந்தார். கொண்டிருந்த கிறித்தவ நம்பிக்கைக்குரியவர்களைச் சந்தித்தார். கிறித்துவின் அன்பைக் காட்டி, வீர உரைகளை ஊட்டி விசுவாசத்தில் அவர்களை நிலை நிற்கச் செய்தார்.

கிறித்தவர்களுக்குத் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்புரிந்த அவர், தனது உயர் பதவியையும், உடைமைகளையும், பெரிதென எண்ணவில்லை. சிறையில் இன்னலை அடைந்து கொண்டிருந்த மார்குஸ், மார்க்செல்லியானுஸ் என்ற இருவரும் வேத கூறுவதைப் பின்பற்றி வாழச் செய்தார். நன்றி உணர்வுடன் அவர்களை நிலைத்து நிற்கும்படிச் செய்தார்.

### புனிதரின் புதுமைகள் (அற்புதங்கள்)

ஒரு நாள் சிறைச்சாலைக் கைதிகளைக் கணக்கெடுக்கும் அதிகாரியின் மனைவி ஜோயி என்பவர் 6-ஆண்டுகளாகப் பேசும் சக்தியை இழந்து தவித்தார். புனித செபஸ்தியார், இயேசு கிறித்துவின் மீது கொண்ட தூய பக்தியின் பொருட்டு சிலுவையில் தொங்கும் இயேசுவின் பாதத்தில்

விழுந்து வேண்டினார். அப்பெண்ணில் நாக்கில் சிலுவை அடையாளம் வரைந்தார். உடனே, அப்பெண் பேசத் தொடங்கினார்.

புனித செபஸ்தியார் மூலம் பேசும் சக்தியைப் பெற்ற திருமதி.ஜோயி அவரது கணவர் நிக்கோஸ்ட்ராத்துஸ், ஜெயிலர் கிளாடியஸ் மற்றும் 16 சிறைக் குற்றவாளிகள் புனிதரின் பக்தர்களானார்கள்.

இயேசு கிறித்துவின் நாமத்தினால் சிலுவை அடையாளமிட்டு பல திமிர்வாதக்காரர்களையும், மிக்க நோயாளிகளையும், பேய்-பிசாசுகளையும் விரட்டினார். இவர் பாதுகாப்புப் பணி முகாமில் தூய்மையானவராகவும் சிறந்த பக்திமானாகவும் இருந்ததால், உரோமாபுரி அரசில் மிகக் குறுகிய காலத்திலேயே பாதுகாப்புத் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றார். உரோமாபுரி ஆளுநர் குரோமாத்தியஸ் அவர்கள் தீராத நோயால் துயரப்பட்டபோது இயேசுவின் பெயரால் வழிபாடு செய்து (ஜெபித்து) நலம் பெறச் செய்ததால், தனது மகன் திபூர்சயஸ் மற்றும் தனது உறவினர்கள் பலர் புடைசூழ ஞானஸ்தானம் பெற்றனர்.

இதன் மூலம் சிறைக் குற்றவாளிகள் (கைதிகள்) திருமுழுக்குப் பெறவும், அடிமைகள் விடுவிக்கப்படவும் காரணமானார். சிலகாலம் இராணுவ முகாமில் பணியாற்றிவிட்டு அப்பணியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு உரோமாபுரியில் வேதம் கற்பிக்கும் பணியைச் செய்தார்.

“அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது அவர்களுக்குப் பதிலளிப்பேன்; அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன்; அவர்களைத் தப்புவித்து பெருமைப்படுத்துவேன்”(திருப்பாடல் **92.15**) **இவ்வார்த்தை இந்நிகழ்வுகளுக்கு மிகவும் பொருத்தமுடையதாய்த் திகழ்கின்றது.**

உயிர் பிழைத்த புதுமை (அதிசயம்)

**வேதத்தைக் கற்றுத் தரும் குற்றச்சாட்டுகளுக்காக புனித செபஸ்தியார் கி.பி.287-ம் ஆண்டு பேரரசர் தியோச்சியன் முன் நிறுத்தப்பட்டார். ‘நன்றி மறந்தவன்’ என்ற பழியை அவர்மீது சுமத்தி, அவரைக் கண்டித்தான். அதற்கு அவர் இறைவனை வாழ்த்தி வணங்கி, அவரது திருவுள்ளத்திற்கு ஏற்பவே தான் நடப்பதாக கூறினார். இதைக் கேட்ட அரசன் சினங்கொண்டு புனித செபஸ்தியாரை கற்தூணில் கட்டிவைத்து அம்புகளால் எய்து கொல்ல ஆணை பிறப்பித்தான்.**





அவ்வாறே காவலர்கள் அவரைக் கம்பத்தில் கட்டி இரக்கமின்றி அவர்மீது அம்புகளால் எய்ததோடு, அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி போய்விட்டார்கள்.

ஆனால், இரேனாஸ் என்னும் பெண், புனிதரை அடக்கம் செய்ய இரவில் வந்து பார்த்தபோது அவர் உயிரோடு இருக்கிறாரெனக் கண்டு, வியந்து அவரை தனது வீட்டிற்கு கமுக்கமாக (இரகசியம்) அழைத்துப் போனாள். அங்கே மீண்டும் குணமடைந்தார்.

கிறித்தவர்கள் அவரை எதிரிகளுக்கு மறைவாய் இருக்க மன்றாடிக் கேட்டபோதும்,அதைக் கேளாமல், **“ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு; யாருக்கு நான் அஞ்சவேண்டும்? ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம் ; யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்”** (திருப்பாடல் 27.1) **என்ற வார்த்தையின்படி மீண்டும் ரோமாபுரி மன்னன் தியோக்சியனோடு வாதாட,‘அம்புகளால் எய்து கொல்ல நான் செலுத்திய செபஸ்தியான் நீதானே’ என்றான்.**

**“உனக்கு விரோதமாய் எழும்பும் ஆயுதங்கள் வாய்க்காதே போகும்”** (ஏசாயா54.17) **என்ற இறை வார்த்தையின்படி, புனித செபஸ்தியார் ‘நான்தான் அவன்’ என்றார். ‘நீர் கிறித்தவர்களைத் துன்புறுத்துகிறீர் என்று உலகம் அறியும் பொருட்டு மீட்பராகிய இயேசு கிறிஸ்து என்னை உயிரோடு காப்பாற்றினார்’ என்றார்.**

**இவ்வாறு கூறியதைக் கேட்ட அரசன் வெகுண்டெழுந்து புனித செபஸ்தியாரை தடிகளால் அடித்துக் கொல்லும்படி ஆணையிட்டான். அதன்படி புனித செபஸ்தியார் கி.பி.288 ஆம் ஆண்டு ஜனவரி 20-ம் நாள் அடித்துக் கொல்லப்பட்டு மோட்சமுடி பெற்றார். லூசினான் என்பவர் புனிதரின் திருவுடலை கமுக்கமாக எடுத்து வந்து இயேசுவின் அன்புச் சீடர்களான புனித இராயப்பர், புனித சின்னப்பர் கல்லறை அருகில் அடக்கம் செய்தார்.கி.பி.288 ஆண்டே புனித செபஸ்தியாருக்கு புனிதர் பட்டம் வழங்கப்பெற்றது.**

நோய்கள் குணமடைதல்

கி.பி.680-ஆம் ஆண்டு ரோமாபுரியில் பிளேக் நோய் பரவியது. புனித செபஸ்தியாரை வேண்டிக் கொண்டதால் பிளேக் நோய் முற்றிலும்

அகன்றது. புனிதரின் புகழ் நாடெங்கும் பரவியது. அவரது பெயரால் ஆலயங்கள் எழுப்பி தங்களின் குலதெய்வமாகக் வழிப்படலாயினர்.

புனித செபஸ்தியாரை வேண்டினால் வாந்தி, வைசூரி, அம்மைநோய், காய்ச்சல் போன்றவை பூரண குணமடைவதோடு, படைவீரர்கள் வில் வித்தைக்காரர்கள், விளையாட்டு வீரர்களுக்குப் பாதுகாவலராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

அருளாளர் புனித செபஸ்தியாரின் திருவிழா அவர் இறந்த நாளான ஜனவரி மாதம் 20-ம் நாள் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

காட்டு நெடுங்குளத்தில் புனித செபஸ்தியார்

18-ம் நூற்றாண்டில் புதுக்கோட்டையை முதன்மையாகக் கொண்டு நெசவுத் தொழில் செய்துவந்த ஆதிப்பெற்றோர்கள், மூன்று வீட்டார் முறை, ஐந்து வீட்டார் முறை என்று தரம் பிரித்து 18 கோத்திரங்களாய் வாழ்ந்து வந்தனர். (தமிழக மாவட்ட நூல்.ப.23) காலம் செல்லச் செல்ல...

- ❖ நிலையற்ற அரசியல் சூழ்நிலையாலும்,
- ❖ அடிக்கடி ஏற்பட்ட போர், பஞ்சம், கொள்ளை நோயாலும்,
- ❖ பிரிவினைவாதம் தலைதூக்கியதன் பயனாய் சமயத்தின் மிகப் பெரிய நெருக்கடியாலும்,
- ❖ கத்தோலிக்கத் திருச்சபையின் இரட்டை நிர்வாக முறையாலும், தொண்டை மண்டலத்தைவிட்டு (புதுகை), சிவகங்கை நோக்கி குடிபெயரலாயினர்.

கிடாப்பரி என்னும் ஊரை முதலாகக் கொண்டு கிளைக் கிராமங்களில் பிரிந்து வாழ்ந்த ஒரு குடும்பப் பங்காளிகள் தனித்து சிவகங்கைக்குத் தெற்குப்புறமாய் உள்ள மேட்டு நிலத்தில் குடியேறினர். அதற்கு காட்டுநெடுங்குளம் எனப் பெயர் சூட்டினர். தொடர்ந்து கிறிஸ்தவ மதப்போதகர்களின் வருகையாலும், அவர்கள் செய்த நற்காரியங்களினாலும், முழுமையாக இந்துமதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறினர். இவர்கள் கிறித்தவப்ப பணியில் நன்கு வளர்வதற்கும், இம்மக்களை பாதுகாக்கும் பொருட்டு, புனித செபஸ்தியார் ஆலயத்தைத் திருச்சி மறைமாவட்ட இரண்டாவது ஆயர் மேதகு. ஜான்மரியபார்த்து 1908-ம் ஆண்டு கட்டுவித்து ஆசி வழங்கினார். அப்போதைய கோயில் பிள்ளையாக பண்டாரம் செபஸ்தியான் என்பவரை நியமனம் செய்தார். (நேர்காணல் அந்தோணிராஜ் ஆசிரியர்)





இவ்வாலயத்தில் நாளும் காலை மாலை ஜெபங்களும், வழிபாடுகளும் நடைபெறத் தொடங்கின. அன்று தொடங்கிய இறைப் பற்றுதல் கிட்டத்தட்ட 110 ஆண்டுகளாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. புனித செபஸ்தியாருக்கு உரிய நாளான செவ்வாய்க்கிழமைகளில் ஜெபங்களோடு கூடிய திருப்பலியும், நற்கருணையும் தொடர்ந்து நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

புனித செபஸ்தியார் வழங்கும் புதுமைகள்

காட்டுநெடுங்குளம் மக்களின் காவல் தெய்வமாய், அவ்வூரில் வாழும் ஒவ்வொருவருக்கும் நல்ல ஞானத்தந்தையாய், அந்நிய சக்திகள் ஊரின் உள்ளே நுழைய முடியாதபடி, (இதுவரையில், இனிமேலும்) பாதுகாத்து வருகின்றார்.

ஆண்டுதோறும் ஜனவரி மாதங்களில் கொடியேற்றி எட்டு நாட்கள் புனிதருக்கு நவநாள் சிறப்புச் செய்து எட்டாம் நாள் இரவு வண்ணமிக்க விளக்குகளால் அலங்கரிக்கபட்ட தேர்களில் புனித செபஸ்தியார், புனித சூசையப்பர், அன்னை மரியாள், புனித காவல் சம்மனசு ஆகிய சுருவங்கள் ஊர் வலம் வந்து சிறப்பிக்கப்படுகின்றனர். புனித செபஸ்தியார் எங்களை பாதுகாக்க அவர் பிள்ளைகளாகிய நாங்கள் அவரை எப்போதும் பெருமைப்படுத்த எந்த கவலையும் கண்ணீருமின்றி பாதுகாத்து வருகின்றார்.

முடிவுரை

கிட்டத்தட்ட 110 ஆண்டுகளாக எங்களின் ஆதிப் பெற்றோர் தொடங்கி இன்றுவரையில் இறைவனிடம் எங்களுக்காகப் பரிந்து பேசுகின்றார். பிற மதத்தினரும் வந்து எங்கள் பாதுகாவலரை வணங்கிச் செல்கின்றனர். சுருங்கச் சொல்லின் பல வர்ணாசரங்களைக் கொண்டுள்ள இப்பகுதிகளில் இதுவரை சாதியோ, மதமோ இன்றி அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாய் வாழ்வதற்கு புனித செபஸ்தியாரே காவல் தெய்வமாய் காத்து வருகிறார்.

* * * * *